www.Padasalai.Net www.CBSEtips.in

வகுப்பு : 7

தேர்வு எண் | | | | | | |

# முதல் இடைப் பருவத் தேர்வு - 2023

## தமிழ்

நேரம் : 1.00 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 30

I) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 5X1=5

1. நெறி என்னும் சொல்லின் பொருள்----

(அ) வழி (ஆ) குறிக்கோள் (இ) கொள்கை ஈ) அறம்

2. பகைவரை வெற்றிக் கொண்டவரைப் பாடும் இலக்கியம்.

(அ) கலம்பகம் (ஆ) பரிபாடல் (இ) பரணி ஈ) அந்தாதி

3. பேச்சு மொழியை ----- வழக்கு என்றும் கூறுவர்.

(அ) உலக (ஆ) இலக்கிய (இ) நூல் (ஈ) மொழி

4. ஆய்தத் தொடர் குற்றியலுகரம் அமைந்த சொல்

(அ) எஃகு (ஆ) பாடு (இ) சங்கு (ஈ) எய்து

5. வான் + ஒலி என்பதனை சேர்ந்தெழுதக் கிடைக்கும் சொல் -----

(அ) வான் ஒலி (ஆ) வானொலி (இ) வாவொலி (ஈ) வானெலி

II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி. 5x2=10

அடிமாறாமல் எழுதுக.

6. 'அருள்நெறி' எனத் தொடங்கி 'இசைந்திடும் அன்பறமே' என முடியும் எங்கள் தமிழ் பாடலை எழுதுக.

7. அ) சேர்த்து எழுதுக. 1) வான் + ஒலி= ஆ) இரண்டு + அல்ல =

ஆ) பிரித்து எழுதுக. 1. காடெல்லாம் = ---- 2. பெயரறியா = -----

8. தமிழ் மொழியின் பண்புகளாக நாமக்கல் கவிஞர் கூறுவன யாவை?

9. தமிழ்நாட்டின் இயற்கை வளங்களாகக் கவிஞர் கூறுவன யாவை?

10. கலைச்சொல் எழுதுக. 1. Media 2. Dialogue



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

11. காட்டு பூக்களுக்கு எதனை உவமையாகக் கவிஞர் சுரதா குறிப்பிடுகிறார்?

12. எதிர்பாலுக்குரிய பெயர்களை எழுதுக.

1. மகளிர் x --------- 2. அரசன் x --------

13. தொகைச் சொற்களை விரித்து எழுதுக.

(i) முக்கனி –

(ii) நாற்றிசை –

14. "வாய்மை" எனத் தொடங்கும் குறளை எழுதுக.

**III. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி: 2X3=6**

15. புலிகள் குறித்து நீங்கள் அறிந்து கொண்ட செய்திகளை தொகுத்து எழுதுக.

16. காடு பாடலில் விலங்குகளின் செயல்களாகக் கவிஞர் கூறுவனவற்றை எழுதுக.

17. கிளை மொழிகள் எவ்வாறு உருவாகின்றன?

**IV. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி: 3X3=9**

18. எங்கள் தமிழ் பாடலில் நாமக்கல் கவிஞர் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

காட்டை இயற்கை விடுதி என்று கவிஞர் கூறக் காரணம் என்ன?

19. பேச்சுமொழிக்கும், எழுத்துமொழிக்கும் உள்ள வேறுபாடுகளுள் மூன்றினை விளக்குக.

(அல்லது)

ஜாதவ் பயேங் காட்டை எவ்வாறு உருவாக்கினார்?

20. பிழையைத் திருத்திச் சரியாக எழுதுக.

(i) கோவலன் சிலம்பு விற்கப் போனாள்.

(ii) பசு கன்றை ஈன்றன.

(iii) அரசர்கள் நல்லாட்சி செய்தார்.



www.Padasalai.Net
Kindly send me your study materials to padasalai.net@gmail.com